தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2018 - 2019

## தமிழ்மொழி

### வளர் தமிழ் 8

சுட்டெண்:..............................................................

நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. சார்பெழுத்துகள்

அ) 217 ☐ ஆ) 18 ☐

இ) 247 ☐ ஈ) 30 ☐

2. உலகின் முதன்மொழி தமிழ் என நிறுவியவர்

அ) ஔவையார் ☐ ஆ) தேவநேயப்பாவாணர் ☐

இ) விபுலாநந்தர் ☐ ஈ ) திருவள்ளுவர் ☐

3. பின்வருவனவற்றுள் ஆறாம் வேற்றுமை உருபு

அ) இல் ☐ ஆ) அது ☐

இ) கு ☐ ஈ) ஆல் ☐

4. சைவநெறி இலக்கியம்

அ) சீறாப்புராணம் ☐ ஆ) திவ்வியப் பிரபந்தம் ☐

இ) தேம்பாவணி ☐ ஈ) திருவருட்பா ☐

5. தமிழ் மண்ணில் முதன்முதலாகக் கரும்பை விளைவித்தவர்

அ) பாரி ☐ ஆ) சங்கிலியன் ☐

இ) குமணன் ☐ ஈ) அதியர்மான் ☐

6. நூலின் தொடக்கத்தில் அந்நூலை அறிமுகப்படுத்தி எழுதும் உரை

அ) முடிவுரை ☐ ஆ) கருத்துரை ☐

இ) முன்னுரை ☐ ஈ) பதிவுரை ☐

7. நண்பி ஊரிலிருந்து வந்தாள். இச்சொல்லியம் உணர்த்தும் பொருள்

அ) நீங்கற்பொருள் ☐ ஆ) ஏதுப்பொருள் ☐

இ) எல்லைப்பொருள் ☐ ஈ ) ஒப்புப்பொருள் ☐

8. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனப் பாடியவர்

அ) தொல்காப்பியர் ☐ ஆ) கணியன் பூங்குன்றனார் ☐

இ) திருவள்ளுவர் ☐ ஈ ) காளமேகம் ☐

9. கச்சணிந்த ஆய்ச்சியருடைய கைக்கு வந்தபின், நீர் பெற்ற பெயர்

அ) தயிர் ☐ ஆ) பால் ☐

இ) தண்ணீர் ☐ ஈ ) மோர் ☐

10. அறுபதாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) வைரவிழா ☐ ஆ) பவளவிழா ☐

இ) பொன்விழா ☐ ஈ ) வெள்ளிவிழா ☐

11. நாள் தோறும் கீரை வகைகளை உண்பது உடலுக்கு நன்மை தரும்.

இதில் தோறும் என்பது

அ) உரிச்சொல் ☐ ஆ) இடைச்சொல் ☐

இ) வினைச்சொல் ☐ ஈ) பெயர்ச்சொல் ☐

12. ஓடினான் எனும் வினைமுற்றின் வினையடி

அ) ஓடும் ☐ ஆ) ஓடி ☐

இ) ஓடிய ☐ ஈ) ஓடு ☐

13. குலசேகரம் வைரமுத்து என்னும் இயற்பெயரைக் கொண்டவர்

அ) எல்லாளன் ☐ ஆ) இராவணன் ☐

இ) கயிலைவன்னியன் ☐ ஈ) பண்டாரவன்னியன் ☐

14. நாங்கள் + உடன் =

அ) நாங்களுடன் ☐ ஆ) நானுடன் ☐

இ) எங்களுடன் ☐ ஈ) என்னுடன் ☐

15. திண்தோள் என்பதன் பொருள்

அ) வயிரத்தோள் ☐ ஆ) அகன்றதோள் ☐

இ) மென்மையான தோள் ☐ ஈ) நெடுந்தோள் ☐

16. த்,ட்,ற்,இன் என்பன

அ) உரிச்சொற்கள் ☐ ஆ) பகுதிகள் ☐

இ) சாரியைகள் ☐ ஈ ) இடைநிலைகள் ☐

17. ''என்னம்மா நமக்கு? நாங்கள் எதனிலும் குறைவதில்லை'' எனப் பாடியவர்

அ) பாரதியார் ☐ ஆ) மோசிகீரனார் ☐

இ) பாவேந்தர் ☐ ஈ) உருத்திரமூர்த்தி ☐

18. ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை பிறந்த ஊர்

அ) நல்லூர் ☐ ஆ) கந்தரோடை ☐

இ) வயாவிளான் ☐ ஈ) நவாலி ☐

19. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை

அ) வா ☐ ஆ) உண் ☐

இ) படி ☐ ஈ) குடி ☐

20. ''இனிப்பாக இருக்குமென்றும் அதனை உண்டால், இறப்பேதும் அணுகாது'' எனக் கூறப்பட்ட கனி

அ) மாங்கனி ☐ ஆ) விளாங்கனி ☐

இ) பலாக்கனி ☐ ஈ) நெல்லிக்கனி ☐

21. செம்மையான மொழிவளத்தைக் கொண்டிருப்பதால் தமிழை ____________ என்பர் .

அ) பைந்தமிழ் ☐ ஆ) முத்தமிழ் ☐

இ) தேன்தமிழ் ☐ ஈ) செந்தமிழ் ☐

22. இடையின மெய்யெழுத்துகள்

அ) க் ச் ட் த் ப் ற் ☐ ஆ) ங் ஞ் ண் ந் ம் ன் ☐

இ) ய் ர் ல் வ் ழ் ள் ☐ ஈ) க் ச் ட் த் ய் ர் ☐

23. பண்டாரவன்னியனிடம் படை உதவி பெற்றுக்கொண்ட கண்டி மன்னன்

அ) துட்டகெமுனு ☐ ஆ) விக்கிரமராசசிங்கன் ☐

இ) காசியப்பன் ☐ ஈ ) அசேலன் ☐

24. தண்மை + நீர் =

அ) தண்ணீர் ☐ ஆ) தண்னீர் ☐

இ) தன்நீர் ☐ ஈ) தண்நீர் ☐

25. இன்று எமக்குக் கிடைத்துள்ளவை

அ) முதற்கழக நூல்கள் ☐ ஆ) கடைக்கழக நூல்கள் ☐

இ) இடைக்கழக நூல்கள் ☐ ஈ) முக்கழக நூல்கள் ☐

26. ஒன்றன் பாலுக்கு எடுத்துக்காட்டு

அ) பறந்தது ☐ ஆ) பறந்தன ☐

இ) படித்தான் ☐ ஈ) பாடினான் ☐

27. மிகப்பழைமையான இலக்கண நூல்

அ) நன்னூல் ☐ ஆ) இலக்கண விளக்கம் ☐

இ) தொல்காப்பியம் ☐ ஈ) இலக்கணச் சுருக்கம் ☐

28. ஆசுகவிப்பாடலை விரைந்து பாடுவதில் வல்லவர்

அ) மோசிகீரனார் ☐ ஆ) கபிலர் ☐

இ) காளமேகப்புலவர் ☐ ஈ) வேந்தனார் ☐

29. குறிஞ்சி பள்ளிக்குச் சென்று பாடம் படித்தாள். இச்சொல்லியம்

அ) தனிச்சொல்லியம் ☐ ஆ)கூட்டுச்சொல்லியம் ☐

இ) கலப்புச்சொல்லியம் ☐ ஈ) வியப்புச்சொல்லியம் ☐

30. கனிமொழி ______________ எனப் பேசிக்கொண்டிருந்தாள்.

அ) சலசல ☐ ஆ) கணகண ☐

இ) தொண தொண ☐ ஈ) கரகர ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

எமது தாயகத்தின் வடபகுதியில் அமைந்துள்ள ஊர்களில் ஒன்று பருத்தித்துறை. இங்கு வாழ்ந்த எமது முன்னோர் அதிகளவு பருத்தியைப் பயிரிட்டு ஏற்றுமதி செய்தனர். அதன் மூலம் பெரும் வருமானத்தைப் பெற்றனர். இதன் காரணமாகவே இவ்வூருக்குப் பருத்தித்துறை என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. அன்று உழவுத்தொழிலில் சிறந்து விளங்கிய மக்கள் இன்று வணிகர்களாகவும் அரச தொழிலாளர்களாகவும் சிறந்து விளங்குகின்றனர். மேலும் நூல் நிலையங்கள், இளைஞர் மன்றங்கள், மாதர் பணிமனைகள் போன்ற பொதுப்பணித் தளங்கள் இயங்குகின்றன. இலங்கையில் புகழ் பெற்ற காட்லிக் கல்லூரி இங்கே தான் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இயற்கை அன்னையின் மிகப் பெருங்கொடையாக விளங்கும் கடல் வளத்தையும் கொண்டுள்ளது. இக்கடல் தரும் செல்வங்கள் அளவற்றவை. இங்கு அமைந்துள்ள துறைமுகம் வரலாற்று முதன்மை வாய்ந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதனாற்றான் ஈழப்போராட்டகாலத்தில் இக்கடற் பகுதி உயர்பாதுகாப்பு வலயத்துள் அமைந்திருந்தது. இவ்வாறு பல சிறப்புகளைக் கொண்ட ஊர் பருத்தித்துறையாகும்.

1. பருத்தித்துறையில் அமைந்துள்ள கல்லூரியின் பெயர் என்ன?

   ____________________________________

2. பருத்தித்துறையில் வாழ்ந்த எமது முன்னோர் எதனை ஏற்றுமதி செய்தனர்?

   ____________________________________

3. இங்கு அமைந்துள்ள பொதுப்பணித் தளங்கள் இரண்டினைத் தருக.

   ____________________________________

4. பருத்தித்துறை மக்கள் அன்று எத்தொழிலில் சிறந்து விளங்கினர்?

   ____________________________________

5. எப்பகுதி உயர் பாதுகாப்பு வலயத்துள் அமைந்திருந்தது?

   ____________________________________

புள்ளிகள் 10

3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. ஐம்பெருங்காப்பியங்களுள் இரண்டினைத் தருக.

_______________________________________________

_______________________________________________

2. பண்டாரவன்னியன் விழுப்புண் அடைந்த இடம் எது?

_______________________________________________

3. ''சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா''

இப்பாடலைப் பாடியவர் யார்? இவர் எந்நூற்றாண்டைச் சேர்ந்தவர்?

_______________________________________________

_______________________________________________

4. ''வலம்படு வாய் வாள் ஏந்தி'' எனும் பாடல் இடம் பெற்ற நூல் எது?

_______________________________________________

_______________________________________________

5. தமிழ் நாட்டில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியவர்கள் யாவர்?

_______________________________________________

_______________________________________________

6. அறிஞர் கூடி எதிர்உரை செய்யும் அரங்கை எவ்வாறு அழைப்பர்?

_______________________________________________

_______________________________________________

7. வழிப்போக்கருக்கு உண்டியும் உறைவிடமும் வழங்கும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## வறுமை

| | | | | |
|---|---|---|---|---|
| *வெற்றி* | *வாழ்க்கை* | *தாழ்ந்து* | *புகழும்* | *தோழி* |

வறுமைப்புயலிற் சிக்கிவிடில்
______________ தன்னை வெறுப்பதுவோ!
சிறுமைக் குணமே நீ கொண்டு
தலையே ______________ செல்வதுவோ!

ஏழ்மை எம்மிற் குடிகொண்டால்
எதிர்த்து ______________ கொள்ளாமல்
தாழ்வு தனைக் கொண்டு ஏங்குதல்
தகுமோ முறையோ ______________!

வறுமைப்பட்டே வாழ்ந்து உலகில்
வளமும் ______________ பெற்றுப் பின்
பெருமை பூண்டு வாழ்ந்திட்ட
பெரியோர் வாழ்க்கை பாடமடா!

புள்ளிகள் 10

5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் வினைமுற்றுகளின் வினையடி, இடைநிலை என்பவற்றைத் தருக.

| வினைமுற்று | வினையடி | இடைநிலை |
|---|---|---|
| சென்றான் | | |
| கற்பான் | | |
| எழுந்தான் | | |

2. அ. உருபு ஏற்காத வேற்றுமைகள் எவை?

_______________________________

ஆ. பின்வரும் வேற்றுமைகளின் உருபுகள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

5 ஆம் வேற்றுமை

_______________________________

6ஆம் வேற்றுமை

_______________________________

3. அ. அமைப்பு அடிப்படையில் சொல்லியங்கள் எத்தனை வகை?

_______________________________

ஆ. ''பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்'' என்று ஆசிரியர் கூறினார்.

இது எவ்வகைச் சொல்லியம்? _______________________________

இதன் தலைமைத்தொடரையும் சார்புத்தொடரையும் எழுதுக.

தலைமைத்தொடர் _______________________________

சார்புத்தொடர் _______________________________

4. பொருள் தருக.

ககனம் ________ கொல்லை ________

பைந்தமிழ் ________ ஆய்ச்சியர் ________

இரண்டகன் ________ மடைப்பள்ளி ________

5. பின்வரும் உறுப்புகள் வெளிப்படாது சொல்லியங்கள் எழுதுக.

தோன்றா எழுவாய் ________

________

தோன்றாச் செயப்படுபொருள் ________

________

தோன்றாப் பயனிலை ________

________

புள்ளிகள் 15

6) **பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

இனியன் ஓர் உண்டியல் வைத்திருந்தான். அவன் நாள்தோறும் அதில் காசு போடுவான். ஒரு நாள் அவன் அந்த உண்டியலை யாருக்கும் தெரியாமல் உடைத்தான். அதிலிருந்த காசுகளை எடுத்துக் கொண்டு வெளியே சென்றான். உண்டியல் உடைத்திருப்பதை அவனது தாயார் கண்டார். அவருக்குச் சினம் வந்தது. சிறிது நேரம் கழித்து இனியன் அமைதியாக வீட்டிற்குள் நுழைந்தான். அவன் அம்மாவைப் பார்த்து, ''உண்டியலில் உள்ள பணத்தை எமது தாயகத்தில் வாழும் ஏழைக் குழந்தைகளுக்கு அனுப்பிவிட்டு வருகிறேன் அம்மா'' என்றான். அம்மாவும் இனியனை அன்போடு அணைத்துக் கொண்டார்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

**அ. காட்டுமல்லிகை**

**ஆ. தாயகம்**

*. அமைவிடமும் காலநிலையும்*

*. தாயகத்து உறவுகளும் பண்பாடும்*

*. தாயகத்தைப் பற்றி நீர் அறிந்தவை.*

*. தாயகத்தை நீர் விரும்புகின்றீரா? ஏன்?*

**இ. மழை**

. மழை எவ்வாறு பெய்கிறது.

. மழையின் அகத்தியம், நன்மைகள்

. மழை இல்லாவிடின் ஏற்படும் தீமைகள்.

. அதிக மழையினால் ஏற்படும் தீமைகள்.

புள்ளிகள் 20